## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(31.12.2022 முதல் 04.01.2023)

**அறிக்கை எண்: 104/2022** **தேதி: 30.12.2022**

### தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 30 - 31 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 - 25 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (31.12.2022 முதல் 04.01.2023).

| கடந்த வார வானிலை (27.12.2022 முதல் 29.12.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (31.12.2022 முதல் 04.01.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 27/12 | நாள்-2 28/12 | நாள்-3 29/12 | தேதி | நாள்-1 31/12 | நாள்-2 01/01 | நாள்-3 02/01 | நாள்-4 03/01 | நாள்-5 04/01 |
| 3.2 | 2.6 | 0 | மழை (மி.மீ.) | 1 | 0 | 2 | 0 | 1 |
| 31 | 30 | 31 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 31 | 31 | 30 | 30 | 30 |
| 25 | 24 | 24 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 22 | 22 | 22 |
| 5 | 5 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 2 | 2 | 4 | 4 | 4 |
| 78-73 | 76-68 | 78-68 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-60 | 90-60 | 90-60 | 90-60 | 90-60 |
| 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 4 | 8 | 12 | 8 | 6 |
| வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றின் திசை | கிழக்கு வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | வட வட கிழக்கு | வட வட கிழக்கு |

### தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் அதிக மேகமூட்டத்துடன் காணப்படும். 31.12.2022, 02.01.2023 மற்றும் 04.01.2023 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30 - 31 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 23 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-12 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| நெல் | நடவு வயல் | இலை சுருட்டுப்புழுக்களின் அறிகுறிகள் (புழுக்களால் சுருண்ட இலைகள், வெள்ளையான சுரண்டப்பட்ட இலைகள்) குறிப்பிட்ட அளவில் தென்பட்டால், கார்போசல்பான் 6 % குருனையை எக்டருக்கு 16.7 கிலோ தூவவும் அல்லது கார்டாப் கைட்ரோ குளோரைடு 50 % SP யை எக்டருக்கு 1 கிலோ என்ற அளவில் மழை நின்ற பின், வயலில் தூவவும். விவசாயிகள் பிவேரியா பேசியானா வை தமிழ் நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறையில் வாங்கி பயன்படுத்தலாம். |
| | | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் ஆனைக்கொம்பன் ஈ தாக்கம் பரவலாக தென்படுகிறது. இதனால் பயிரின் குருத்துப் பகுதி வெங்காயத் தாள் போல் மாறி கதிர்கள் வெளிவராது. இதன் பரவலை தடுக்க, மழை நின்ற பின், குளோர்பைரிபாஸ் 20 EC 500 மில்லி / எக்டர் என்ற அளவில் பயன்படுத்தவும் அல்லது பிவேரியா பேசியானா 5 கிராம் என்ற அளவில் 1 லிட்டர் தண்ணீரில் பயன்படுத்தவும். |
| | | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலையுறை கருகல் நோய் பரவலாக தென்படுகிறது.இதன் பரவலை தடுக்க, மழை நின்ற பின், ஏக்கருக்கு கார்பன்டெசிம் 200 கிராம் அல்லது புரோப்பிகோனோசோல் 200 மி.லி மருந்தை 200லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் |
| கால்நடைகள் | ஆடு மற்றும் மாடு | தற்போது இரவு நேர வெப்பநிலை குறைந்து காணப்படுவதால் நிமோனியா பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது எனவே ஆடு, மாடு குறிப்பாக இளம் கன்றுகளை திறந்த வெளியில் விடக்கூடாது. இரவு நேரங்களில் கொட்டகைகளில் வெப்பமூட்டிகளை பயன்படுத்தவும். |

## குறுஞ்செய்தி

பூச்சி தாக்குதலின் அறிகுறிகளை பொறுத்து பரிந்துரைக்கப்பட்ட பூச்சிகொல்லி மருந்துகளை குறிப்பிட்ட அளவில் தெளிக்கவும்.

**இயக்குநர்**